# முடிவுரை

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் ‘மரபியல்’ என்னும் தனி இயலில், உலக உயிர்களின் மரபியல்புகளையெல்லாம் விரிவாக விளக்கி இருக்கிறார். இருந்தபோதிலும் எழுத்ததிகாரம், சொல்லதிகாரங்களின் நூற்பாக்களில் கருத்துக்கள் அமைவிற்கேற்ப ‘மரபு’ என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். இதனை நோக்கும்போது மரபு குறித்து விரிவான விளக்கங்கள் தொல்காப்பியத்திற்கு முன் எடுத்தோதியிருக்க வேண்டும் என்று எண்ண முடிகிறது.

தொல்காப்பியர் உணர்த்தும் மரபு என்ற சொல் ஏற்கனவே கூறப்பட்ட நெறியைத் தொடர்ந்து கடைப்பிடிக்கும் முறை, இயல்பு, குணம் ஆகிய பொருளைத் தருகின்றன.

தொல்காப்பியத்திற்குப் பின் வந்த இலக்கண நூல்களும் மரபு என்ற சொல்லைத் தம் நூற்பாக்களில் பயன்படுத்துகின்றனர். தொல்காப்பியர் உணர்த்தும் பாங்கிலேயே மரபு என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். மரபு என்பதற்கு விரிவான விளக்கம் கூறப்படவில்லை.

களஞ்சிய நூல்கள், அகராதி நூல்கள், மரபு என்ற சொல்லிற்கு, காலங்கள் கடந்தும் ஒரு செயலை கடைப்பிடித்து வரும் நிலையே மரபு என விளக்குகின்றன.

திறனாய்வாளர்கள், முன்னோர்கள் போற்றி வந்த செயல், கடமை, நெறிமுறை ஆகியனவற்றை பின்னர் வரும் சந்ததியினர் கடைப்பிடித்து வரும் பண்பினை மரபு என உணர்த்துகின்றனர். முன்னோர் வழிவகுத்து நின்ற கூறுகளை கடைப்பிடிக்கும்போது அதன் உண்மைத் தன்மை மாறாதிருக்கும்போது மரபு போற்றப்படுகின்றது என்பதையும் கூறுகின்றனர்.

புதுக்கவிஞர்கள், தற்கால காதலர்களின் எண்ணங்களை எடுத்துரைக்கும்போதும், தங்களின் கற்பனைத் திறனை மெருகூட்டவும், வாசகர்களின் எண்ணங்களை விரைந்திழுக்கச் செய்யவும் புதுக்கவிதைகளில் இயற்கையைப் பதிவு செய்திருக்கின்றனர். இவ்வியற்கைச் சூழல்களான, வயல்

வெளிகள் மலைகள், காடுகள், மரங்கள், பறவைகள், விலங்குகள், ஊர்வன உயிர்கள் போன்றவற்றின் வாழ்வு முறைகளை கவிதைக்குள் கையாளுகின்றனர். இதோடு கால நிகழ்வுகள், குளிர்காலம், பனிக்காலம், வெயில் காலம், அந்தி, மாலை, விடியல், நண்பகல் ஆகியனவற்றை கவிதைக்குள் உணர்த்துகின்றனர்.

இன்றைய காதலர்களின் மன உணர்வினை மையமாக வைத்துப் புதுக்கவிதை படைப்பதால் ஒரு காதலன் தன் காதலியை நினைத்து ஏங்குவதாகப் பாடும் 'ஒருதலைக் காதல்' பண்பான 'கைக்கிளை' உணர்வுகள் பதிவாகியிருக்கின்றன. ஆண்கள், பெண்களின் அழகிலும், அவர்கள் தனக்குக் கிடைக்க வேண்டும் என்ற ஏக்க நிலையிலும், வருந்தும் சூழல்களையே மிகுதியான கவிதைகளில் படைத்துள்ளனர். பெண்கள் தனக்குரிய வயது வந்தும் திருமணம் ஆகாத நிலையிலிருந்து ஏங்கும் சூழல்களைப் பாடுகின்றதனால், புதுக்கவிதைகள் தொல்காப்பிய பெருந்திணை மரபை பெறுகின்றன.

சமூக உணர்வுகளை எடுத்துரைக்கும்போதும், இன்றைய அரசியல் சூழல்களை மதிப்பிட்டு அவற்றின் குறைகளை எடுத்துரைக்கும்போதும், பழங்கால மன்னர்களின் வீரம், கொடைத்திறன், ஆட்சி முறை, மன்னர்–மக்கள் உறவுகள் ஆகியனவற்றை மிகுதியாகத் தம் புதுக்கவிதைகளில் எடுத்துக்காட்டி விளக்குகின்றனர். மன்னர்களின் இத்தகைய மாண்புகளை உயர்வுபடுத்தியும், முரணாகவும், குறியீடாகவும் உணர்த்துகின்றபோது அவை புறத்திணையியல் மரபைப் பெறுகின்றன.

புதுக்கவிதைகளில், காதலன், காதலியிடம் பேசும்போது அவளின் நினைப்பும், அவள் உருவமும் தோன்றுவதான உணர்வுகளைப் படைத்திருக்கின்றனர். இவை தொல்காப்பிய களவியல் மரபைத் தாங்கி நிற்கின்றன என்பதை அறிய முடிகின்றது.

காதலன், காதலி இருவரும் பேசிக்கொள்வது போல கவிஞனே கூறும் கூற்று மரபினைப் புதுக்கவிதைகளில் பதிவு செய்துள்ளனர். தொல்காப்பிய இலக்கணப்படி பெயர்சுட்டா மரபும் புதுக்கவிதைகளில் கையாளப்பட்டுள்ளது.

புதுக்கவிதைகளில் காதலனின் பண்புகளை எடுத்துக்கூறும்போதும் இயற்கையை வருணிக்கும்போதும் தொல்காப்பிய உவமையியல் கருத்துக்களை ஒட்டியே விளக்குகின்றனர். செய்யுளியலில் கூறிய செய்யுள் உறுப்புக்களை, புதுக்கவிதை நயத்திற்கும் கருத்து வளத்திற்கும், எடுத்துரைப்பிற்கும் பயன்படுத்தியுள்ளனர்.

காதல் சிந்தனைகளைப் புதுக்கவிதைக்குள் எடுத்துரைக்கும்போது சங்க எட்டுத்தொகை பாடலடிகளைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும் பாடல் அமைப்பில் புது உத்திகளைக் கொள்கின்றனர். சங்கப் பாடல்களில் புலவர்கள் உணர்த்தும் புலப்பாட்டு உத்தியினை உள்வாங்கிக் கொண்டு அதனையே தங்களுடைய படைப்புக்களிலும் மரபாகப் பின்பற்றி புதுக்கவிதைகள் படைத்துள்ளனர்.

சங்கப் பாடல்களில் உணர்த்தப்படும் ஆழமான சிந்தனைகளை, தான் உணர்த்த விரும்பும் காதல் உணர்ச்சிக்கு பதிவு செய்கின்றனர். சமூகத்திற்கு கூற விரும்பும் சிந்தனைகளை எடுத்துரைக்கும் புதுக்கவிதைகளில், சங்கப் புலவர்கள் எடுத்துக்கூறிய பொதுமைச் சிந்தனைகள், மன்னர்களின் உயர் பண்புகள் நிலையாமைச் சிந்தனைகள், வளமான வாழ்வுமுறைகள், பண்பட்ட வாழ்க்கை ஆகியனவற்றைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தலைவனின் உயர் பண்புகளை எடுத்துரைக்கும் புதுக்கவிதைகளில், சங்க பத்துப்பாட்டு ஆற்றுப்படையில் வரும் பாடல் அடிகளைப் போலவே நீண்ட கவிதை மரபுகளை அமைத்துப்பின்பற்றுகின்றனர். பத்துப்பாட்டு இலக்கியங்களில் பாணர்கள் தங்களுடன் வரும் பாடினி, விறலியர்களை வருணனை செய்தது போல கவிஞர்களுக்கும் பெண்களைத் தம் படைப்புக்களில் வருணிக்கின்றனர்.

சங்க அக இலக்கியங்களில் கதை மாந்தர்கள் உரையாடிக்கொள்கின்றனர். புதுக்கவிதையில் காதலர்கள் சார்பாக கவிஞர்களே பேசிக்கொள்ளும் சூழலை அமைக்கின்றனர். காதலர்களின் காதல் உணர்வுகளை எடுத்துரைக்கும் கூற்றாகவே உள்ளன.

செவ்வியல் இலக்கியங்களில் காதல் மாந்தர்களின் அகவுணர்வினை எடுத்துரைப்பதற்கு முதல், கரு, உரிப் பொருள்களைக் கையாளுவதைப்போல் புதுக்கவிதைகளில் காதலன், காதலியின் மீது கொண்ட அன்பு மிகுதியை எடுத்துரைத்து வேதனைப்படுவதற்கு முதல், கரு, உரிப் பொருட்களை எடுத்துக்காட்டுகின்றனர். சங்கப் புலவர்கள் கையாண்ட உள்ளுறை, இறைச்சி என்ற உத்தியை, புதுக்கவிஞர்கள் கையாளும்போது மரபிலிருந்து மாறுபடுகின்றனர். புதுக்கவிதைகளில் காதலன் தன் காதலை நேரிடையாகவே வெளிப்படுத்திக் கூறுவதாக படைக்கின்றனர்.

சங்கப் புலவர்கள் அகமாந்தர்கள் அணிந்துள்ள அணிகலன்களின் அழகு நயங்களைக் கூறும்போது வயல்களில் விளையும் நெல்மணிகள், நெற்பயிர்கள் ஆகியவற்றின் காட்சியோடு பொருத்திக் காட்டுகின்றனர். கவிஞர்கள் இயற்கைக் காட்சிக்கு மனித உருவங்களையும், குணங்களையும் உவமைப் படுத்திக் கூறுகின்றனர். சங்கப் புலவர்கள் உயர்திணைக்கு அஃறிணையை உவமை கூறினர். கவிஞர்கள் அஃறிணைக்கு உயர்திணையை உவமிக்கின்றனர். இது மரபு நிலை வளர்ச்சி மாற்றமாக அமைகின்றன.

சமூகத்திற்கும், இளைஞர்களுக்கும் புதிய சிந்தனைகளை எடுத்துக் கூறும்போது அற இலக்கியங்கள் கூறும் கருத்துக்களையும், இலக்கியப் பாடல் அடிகளையும் எடுத்தாளுகின்றனர்.

சமூகத்தில் பெண்களின் உணர்வுகளையும், வாழ்க்கை முறைகளையும், துன்ப நிலையையும் எடுத்துக்கூறும் புதுக்கவிதைகளில் காப்பிய மாந்தர்களின் பெயர்களையும், உயர் பண்புகளையும் சுட்டிக் காட்டிக் கூறுகின்றனர். அரசியல் பிரமுகர்களை விமர்சிக்கும்போது காப்பிய நிகழ்வுகளை எடுத்தாளுகின்றனர்.

சமூகத்தில் நடக்கும் நியாய, அநியாயங்களைச் சுட்டிக் காட்டும்போதும், சாதி, சமயப் பூசல்களை சாடும்போதும், காப்பியங்களின் மையக்கருத்தையும், காப்பிய மாந்தர்களின் இயல்பினையும், குணத்தையும் சுட்டிக்காட்டிக் கவிதை படைக்கின்றனர். சமூக உணர்வினை அதிநுட்பமாக எடுத்துரைப்பதற்காகக் காப்பியங்களில் நிகழப்படாததை நிகழ்ந்ததாக மரபு மாற்ற நிலையில் கூறுகின்றனர்.

புதுக்கவிதைகளில் தான் உணர்த்த வரும் கருத்துக்களை செறிவாக்கவும் கவிதையைச் செழுமையுறச் செய்வதற்கும் காப்பியங்களின் முழுமையும் தன் இயல்பிற்கேற்பப் பயன்படுத்துகின்றனர். அறச்சிந்தனைகளை எடுத்துரைத்துப் பேசும்போது மணிமேகலைக் காப்பியத்தைச் சுட்டிக் காட்டி வெளிப்படுத்துகின்றனர்.

சமூகத்தின் சீரழிவுகளை எடுத்துரைத்து வேதனைப்படும் உணர்வுகளைப் பதிவு செய்யும்போது, புராண இதிகாசங்களில் வரும் நிகழ்வையும் மையக் கருத்தையும், மாந்தர்களின் குணத்தையும் தம் படைப்புக்களில் பதிவு செய்கின்றனர். தொன்ம நிகழ்வுகளைப் போற்றியும், மாற்றம் செய்தும், தான் உணர்த்த விரும்பும் சிந்தனைகளுக்கு ஏற்ப புதுக் கவிஞர்கள் மரபைப் போற்றியுள்ளனர்.